முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1004

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

29.06.2022, புதன்கிழமை

1. பிரணவ சக்தியே அரங்கா வாழ்க
பிரணவக்குடில் படைத்த தேசிகா வாழ்க
சரவணச்சுடரேற்றி உலகை காப்பேன் என
சற்குருவாய் என் சக்தியாய் வாழும் அரங்கனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி ஆறுமுகன் யானும்
வழங்குவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 15 நாள், 29.06.2022 புதன்கிழமை)
தாழ்விலா அரங்கன் உன் தர்மமே
தரணியை காத்து வழி நடத்தும்
3. வழிநடத்தும் அரங்கன் உன் சன்மார்க்கமே
வையகத்தாரை ஞானவான்களாக ஆக்கி தெளிவூட்டும்
தெளிவூட்டும் தர்மநெறியும் திடம்காட்டும் உண்மை நெறியும்
தடையின்றி உலகோர்க்கு தவமாக தக்க தண்டாயுதன் என் வரமாக அருளுகின்ற
4. அரங்கனே உன் வழி யானே இறங்கி
அற்புதத்தை அகிலத்தில் நடத்துவேன்
வரமென உன் தொண்டர்படைகள் வையகத்தில் என் காட்சி அருள்பெற்று
வருமுலகில் உலகோரைத் தேற்றும் வல்லமைமிக்க ஞானவான்களாகி
5. ஆகியே அகிலத்தை மாற்றும் ஆற்றல்மிக்கவர்களாக
அரங்கன் உன்வழி அழியாமை பெறுவர்
ஆகவே அரங்கனை அடையாளம் கண்ட கலியுக மக்களே
ஆற்றல்பெருகி உலக மாற்றத்தில் இடம் பெறுவர்
6. மாற்றம் தர உலகினில் மக்களே அரங்கன் குடில் நோக்கி
ஆற்றல்பட வர அகிலத்தில் சடுதி ஞானிகள் ஆட்சி ஆகவும்
ஞானவான்கள் ஆட்சியாகவும் மாற்றங்கண்டு அற்புதம் நிகழும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–